DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Caste | : |
| Father Name | : பெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.07.2025.**

**PW - 5**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுக்கா, விளாவூரணிபட்டியில் குடியிருக்கிறேன். நான் ஒரு நிறுவனத்தில் கிளீனர் வேலை செய்கிறேன். அசா.1 ஆண்டிசாமி எனக்கு அத்தை கணவர். அசா.2 அடைக்கம்மாள் எனது அத்தை ஆவார். வழக்கில் இறந்துபோன பழனிசாமியை தெரியும். இறந்துபோன பழனிசாமி எனக்கு அத்தை மகன். அவர் அசா,1, 2 ன் மகன் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். அவரும் எனக்கு அத்தைமகன்தான். 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் எதிரி சொக்கலிங்கம் என்னை அழைத்து அவரது பல்சர் வண்டிக்கு பெட்ரோல் போட்டு வர சொன்னார். நான் பெட்ரோல் போட்டுவிட்டு வந்தபோது பீரங்கிமேடு அருகே எனது ஆண்டிசாமி மாமா வீடு அருகே ஆஜர் எதிரியும், பழனிசாமியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். சண்டை நடந்து கொண்டிருந்தபோதே எதிரி சொக்கன் என்கிற சொக்கலிங்கம் அருவாளை எடுத்து பழனிசாமியின் தலையின் பின்புறம் வெட்டிவிட்டார். பக்கத்திலிருந்த

ஆட்கள் வந்தார்கள். சொந்தக்காரர்கள் வரவில்லை. எதிரி வெட்டியதால் பழனிசாமிக்கு பின்தலையில் காயம் இருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து போனோம். அங்கிருந்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு பழனிசாமி இறந்துவிட்டார். ஆயுதத்தைப் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் அதசாபொ.1 அருவாளால்தான் எதிரி, பழனிசாமியை வெட்டினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எனது ஊர் விளாவூரணிபட்டியானது பீரங்கிமேட்டிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். பீரங்கிமேட்டிலிருந்து தென்வடல் ரோட்டிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தள்ளிதான் அசா.1 ஆண்டிசாமியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அங்குதான் அவர்கள் குடியிருக்கிறார்கள், தோட்ட வேலையும் அங்குதான் செய்கிறார்கள் என்றால் சரிதான். அசா.1, அசா.2 ஆகியோர் வேறு நபர்களின் தோட்ட வேலைக்கு போகமாட்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று எத்தனை மணிக்கு எதிரி சொல்லி பெட்ரோல் போட போனேன் என்றால் சுமார் 05.00 மணி இருக்கலாம், துவரங்குறிச்சிக்கு போனேன். பீரங்கிமேட்டிலிருந்து துவரங்குறிச்சி போக 30 நிமிடம் ஆகலாம் என்றால் சரிதான். நான் திரும்பி வரும்போது சுமார் 06.00 அல்லது 06.30 மணியானது என்றால் சரிதான். இறந்துபோன பழனிசாமி திருமணமாகாத நபர் என்றால் சரிதான். பழனிசாமி டேங்கர் லாரி ஓட்டப்போவதால் பல ஊர்களுக்கு சென்று தங்குவார் என்றால் சரிதான். அவ்வாறு செல்லும்போது அவர் பெண்களிடம் அடிதடி சண்டை செய்வார். பழனிசாமி பெண்களிடம் தவறாக நடப்பதால் ஊர்காரர்கள் அடிதடிக்கு வருவார்கள் என்றால் சரிதான். அக்கம்பக்கம் ஊர்காரர்கள் பழனிசாமி மீது விரோதமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அன்று மைால 06.00 மணிக்கு திரும்பி வரும்போது நான் மது அருந்திவிட்டு வந்து அந்த வீட்டருகே

படுத்துவிட்டேன் என்றால் சரிதான். சொக்கலிங்கம், பழனிசாமியும் சண்டைப் போட்டது எனக்கு நேரடியாக தெரியாது. பீரங்கிமேட்டிற்கு மேற்புறம் உள்ள வீடு பாழடைந்த வீடு என்றாலும், அதில் யாரும் குடியிருக்க முடியாது என்றாலும் சரிதான். என்னை சம்பவத்திற்கு பிறகு துவரங்குறிச்சி போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று இரவு முழுவதும் அங்கு வைத்தார்கள் என்றால் சரிதான். எதிரி சொக்கலிங்கத்தையும் அன்று இரவு அவரது வீட்டிலிருந்து கூட்டிவந்து என்னுடன் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். இரவு 09.00 மணிக்கு பழனிசாமி இறந்தபிறகு அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் காவல்நிலையத்திற்கு வந்தார்களா என்றால் மருத்துவமனைக்கு போனார்கள், அங்கு சென்றுவிட்டு கால்மணி நேரம் கழித்து வந்தார்கள். அவர்கள் இரவு நேரத்தில் காவல்நிலையத்தில் இல்லை. நானும், எதிரியும்தான் காவல்நிலையத்தில் இருந்தோம். அடுத்தநாள் மதியம் வரை என்னை காவல்நிலையத்தில் வைத்திருந்துவிட்டு வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். எதிரியை போலிசார் நீதிமன்றத்திற்கு அனுப்பினார்கள். நான் முதல் விசாரணையில் 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் எதிரி சொக்கலிங்கம், பழனிசாமியை அதசாபொ.1 அருவாளால் வெட்டியதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.